1069
128



15 JUN 19
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருமழிசையாழ்வார் மும்மணிக்கோவை.

இது

ஸ்ரீ வானமாமலைமடம் 25-வது பட்டம்
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியரா யெழுந்தருளி
யிருக்கிற

## ஸ்ரீ கலியன் ஸ்வாமிகளின்

திருவடி ஸம்பந்தியும்,
திருநெல்வேலி இந்து கலாசாலைத் தமிழ்பண்டிதருமாகிய
ஸ்ரீமாந்

## V. வேங்கடராஜுலு ரெட்டியாரால்

இயற்றப்பட்டு
திருப்பாதிரிப்புலியூர்,

## ஸ்ரீமாந். S. V. யதிராஜுலு நாயுடு

அவர்களால்

திருப்பாதிரிப்புலியூர்
...விலாசம் அச்சுக்கூடத்தில்
வெளியிடப்பட்டது.
...து ஐப்பசி மீ 1௳
1922.

O22:417
N22
175433

## நூன்முகம்.

ஸத்ஸம்ப்ரதாய சீலர்களே !

மும்மணிக்கோவை என்பது தமிழ்மொழிக்கண் வழங்கும் 96-வகை ப்ரபந்தங்களுள் ஒன்று மூன்றுமணிகளினாலாகிய ஓர் ஹாரம்போல, வெண்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை யென்னும் மூவகைப் பாக்களால ஆக்கப்பட்ட ஓர் ஹாரம் ஆகும் இது.

முப்பரம் பொருளிற்கு முதலைத் தப்பற நாடித் தந்தமையானும் தத்வத்ரயப் பொருளைத் திருச்சந்த விருத்தத்துள் விசதமாய் எடுத்துக் காட்டினமையானும் நம்பக்திஸாரர்க்கன்றி வேறு யார்க்குத்தான் "மும்மணிக்கோவை" ஏற்புடைய ஹாரமாகும்.

இத்தகைய அழகிய ஹாரத்தை ஆழ்வார்க்குப் பூட்டிய எனது அன்பர் ஸ்ரீமாந் V வேங்கட ராஜுலு ரெட்டியாரவர்கள் பேரறிவோடு பற்பல நற்குணங்களும் வாய்ந்தவர் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ நாடுநகரமும் நன்கறியத் தாண்டவம் புரியச்செய்ய அளவற்ற அவாவுடன் படாதபாடுபட்டுவருகிறார்கள். இவர் தம்மன் முயற்சியை அனைவரும் முற்றும் வித்தல் அத்யாவசியமே. ஆழ்வார் விஷயமாய் ஓர் ஆராய்ச்சி நூலொன்று எழுதித்தரவேண்டுமென எனக்கு "மும்மணிக்கோவை" கிடைத்தது

எனது தலைப்பேறே அவர்கள் எழுதிவரும் ஆராய்ச்சி நூலுக்கு விதைபோன்றுள்ள இந்நூல். அவர்கள் விரும்பிய வண்ணமே, ரௌத்ரி ஹுதையீ, மகத்திருநக்ஷத்திரத்தன்றைய தினம் திருமழிசைவளம்பதியில், ஸ்ரீ வைஷ்ணவ ஸபையில் சிறியேனால் யதாமதி அரங்கேற்றப்பட்டது. அனைவரும் நூலினுட்பொதிந்துள நயங்களையும் ஆழ்ந்தகருத்துக்களையும் கேட்டு ஆனந்தமடைந்தனர். இத்தகைய வைஷ்ணவத்தொண்டும் தண்டமிழ்த்தொண்டும் புரிந்துவரும்படி எமது அன்பரை அனைவரும் ஊக்கிவரின் பற்பல அரிய நூல்கள் வெளிவரும்.

இச்சிறு நூலை அழகுபெற அச்சிட்டு உலகு உவப்ப உதவிய "கலாஸதனம்" என்றும் நின்று நிலவுமாறு மழிசைப்பரனடியே வாழ்த்துவேனாக

திருவாலி- அ. இராமாநுஜாசாரியன்,

ஸ்ரீபெரும்பூதூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருமழிசை யாழ்வார்

# மும்மணிக்கோவை.

## காப்பு.

மாமழிசை மன்னும் மணிக்கோவை செய்யாற்றோர்
தாமழிசைப் போங்கும் தலத்தகிலை!—பூமி[1]யிறும்
பூதூர [2]நன்மை பொழில்மேய்க் காலவுபெரும்
பூதூர! நன்மை புரி

---

Q22:47 N2

## நூல்.

செல்வமும் அறனும் திறனும் குணனும்
கல்வியும் ஒழுக்கமும் கவினும் அருளும்
பொன்னும் மணியும் புனைவுறு தானமும்
நன்னிதிக் குவையும் களிர்பெரு வரைகளும்
துங்கமுற் றயாரும் தொழத்தகு மரபின
கங்கையே முதலவாம் கதிதரும் யாறும்
செந்நெலும் கன்னலும் தென்னையும் பூகமும்
எண்ணல முப்படைத் திலங்குற விளங்குவது
யாவரும் வியக்குறூஉம் இந்துதேசமே:

---

1 இறும்பூது + ஊர = ஆச்சரியம் மிக.

2 நல் + மை = நல்ல (நீர் கொண்ட) மேகங்கள்.

தேசத்தில், கங்கையும் தன்பவம் கழுவிய விளை[தருஉம்
பொங்குசீர்ப் புனிதமாம் பொன்னியும் பொருநை[யும்
வடதிசை சமனுற நிறைவுறு பெருவலி
அருந்தவக் குறுந்தனு 3 அகத்திய மாமுனி
அமர்தர அகரும் ஆரமும் செறிவுறீ இப்
பொலிதரு இமயவண் பொதிகைமால் வரையும்
நிலைதர வளம்பல நிறைந்தது; நீங்காத்
தொல்லியற் பெருமையும் சுடர்முடி நெடுங்கொ[டைச்
செல்வமல் இயதிறற் சேரனே முதலா
முடிபுனை யரசர்கள் மூவரும் வாழ்ந்தது;
போரிற் புகழ்தரும் புதல்வரிற் பொலிவுறூஉம்
வீரத் தாய்மார் விரிபுகழ் பயிந்தது;
பொன்னிய விலங்கை புரந்திடு வீடண
மன்னனை யருளியுன் மகிழுநம் பெருமாள்
அறிதுயி லமர்தரும் அரங்கமே முதலா
நிறைபுகழ்ப் பதிகளும் நெடும்பிறைச் சடிலப்
பிஞ்ஞக னுறைதரும் பெரும்பெயர்ப் பதிகளும்
தனனுட் கொண்டு தழைத்தது; தவத்தரும
ஏங்குறப் பாங்கினி தெண்ணரும பத்திசெய்
தயர்வறு மமரர்க ளதிபதி யவனுல்
மயர்வற மதிநலம் அருள வந்த
ஆரும் பெரும் புகழ்சேர் ஆழ்வார் பதின்மரும்
நளிர்சடை யிறைதொழும நாயன் மார்களும்
வள்ளுவர் முதலா மாண்பெரும் புலவரும்
கல்வியிற் பெரியனும் கம்ப நாடனும்
தத்துவம் தனியெனும் சங்கரப் பெரியனும்
அத்தைவே றுமென அறைதரு மறிவனும்

---

3 தனு = உடல்

ஒன்றெனும் இறைப்பொருள் ஒன்றே சிதசித்
தொன்றிய ஒன்றே ஒன்றல மூன்றே
எண்ணரும் தத்துவம் இற்றே யென்று
நண்ணரு மறைகளி னூட்டி நாட்டில்
இன்றென அன்றென ஏகம் பலவெனத்
துன்றிய வெளிற்றுரைச் சூரரைத் தொலைத்து
மலையிட்ட தீப மெனமால் சமயம்
நிலையிட்ட எங்கள் தலையிட்ட புலமையின்
எண்ணருங் குணக்கட லிராமா நுசனும்
ஓங்குசீர் முடும்பை யுலகா சிரியனும்
தேங்கமழ் தொடையலம் தேசிகச் செம்மலும்
பணவாள வரவணைத் துயில்கொளும் பரமனோர்
குணவாள னகிவந் துவகைகொண் டுரைபுகழ்
மணவாள மாமுனி யெனுமெம தடிகளும்
இலகுமெய் யுணர்வினர் பலர்பிறந் துயர்ந்தது
தாவா விழுப்புகழ்த் தண்டமிழ் நாடே:
நாட்டில், தெண்ணீர்க் குளனும் செந்நெற் கழனி
உண்ணீ ரொழுக்கின் எண்ணும் சீர்த்தி [யும்
ஆறவிந் தடங்கிய சான்றோர் திரளும்
கொண்டது; ஔவையிற் கூர்புகழ் கொண்டது
தண்டாச் சீர்த்தித் தொண்டைமண் டலமே:
மண்டலத்து, முத்தியை நத்தியமெய்த் தவ முனி
அத்திரி வசிட்டர் அங்கி ரசுவொடு [வரர்
புலத்தியர் பார்க்கவர் புகழ்பெறும் பிருகுவும்
நலத்தகு முனிவரர் குலத்திர ளும்போய்
நறைவிரி கமலத் தயனை நண்ணி
முறைமுறை தொழுது புகழினு னும்பர்பதி
யாதெமக் கருளுதி மேவத! என்றோத
உந்தியின் மலர்தரு முந்துசீ ரந்தணன்
விச்சுவ கருமற் கூஉய், இச்சகம்

பெச்சு 1 சீர் வைத்து நிச்சயம் காட்டி
உயர்பதி யறைகுதி யென, அத னெறியே
ஐம்பது கோடி யகனில மொன்றினைவத்
துப்பரும் வியப்பத் தாக்கிய ஞான்று
துலைத்தலம் தாழத் தொல்புகழ் தாங்கிச்
சிறந்த திதுவெனப் பரந்தநுண் கேள்விச்
சிற்பியும் முனிவரும் தேவர்தம் குலமும
உச்சிமேற் கொண்டசா லுரைபுகழ் நிறீஇயது;
சித்தம் தெளிந்த வித்தக முனிவரர்
பத்தியிற் றவஞ்செயப் பான்மையி னமைந்தது;
பற்பல சமயமும் நட்பத் தாய்ந்து
தேரின் தேவன ஒருவன் அவனே
மூவரு ளொருவன மூவர்க்கு முதல்வன்
ஆழிப படையன் வாழி மலாமகள்
மைந்தன் யசோதை நந்தன் புதல்வன்
அவனே பரமெனு நாரணச் சார்பின்
மயக்குறு மயலை யிழித்துப்
பெயர்ககரும் பெரும்புகழ்ப் பிறங்கிய பெருமான்
பத்திசாரப பணவன பன்னவன
முத்தி காட்டிய முதல்வன் முனிவன்
பாடல்சால் மாதின் பார்க்கவ முனிக்குத்
தேங்காப் புகழொடு திருவவ தரித்தது
வாங்காச் சீர்த்தி மழிசை யதுவே:
அதுவே முனனுசீர்க் 2காஞ்சி யண்ணல்உலகினை
வைத்தபக கத்தும வலிதால எங்கள்
பத்தி சாரப் பணவன் தோன்றிய
மன்னுசீர் மழிசை வளம்பதி யென்று
துதித்துவந் தாடிய தொலலையம் பதியே.

---

1 சீர் = துலைக்கோல்.
2. காஞ்சியண்ணல் — திருக்கச்சிநம்பிகள்.

அதனால், மின்னி னிலையில மன்னுயிர் யாக்கை
முற்ற மூப்படைந் தெய்த்தொழிந் திடுமுன்
நிலையா வின்பம் நீத்துத்
தலையா முயர்பதம் தந்துகம் மருளும்
மழிசையாழ்வார் மலரடி
நிழல்சேர்ந் தாங்கவன் னெறிவழி யொழுகி
முழுமுதற் பரனடி யடைதற்
செழுதியால் என்றெடும் மடமை நெஞ்சே. (க)

நெஞ்சால் முனிவர் நினைப்பவரும் நீர்மைத்தாய்
மஞ்சார் பொழில்சேர் மழிசையே—அஞ்சாதே
பார்க்கவன்பா லரங்கோன் மதித்ததுபா ருய்யத்தவப்
பார்க்கவன்பா லாங்கோன் பதி. (2)†

பதித்தனை யென்னுள் மழிசைப் பரன்! நின் பதுமங்கள்காப்
பதித்தனை யென்றினு மாறா தருள்க பழவடியேன்
பதித்தனை யென்னதெனே னென்னை மேற்பெரும் பாழ்ங்குடரிற்
பதித்தனை யென்பவர்க் கீயான் பொறைமலர்ப் பண்ணவனே*

---

† (2) உலகத்தாருய்யும்படி, தவம் புரிந்த பார்க்கவ ரிஷிக்குப் புதல்வராகத் திரு அவதரித்த எங்கள் தலைவரான ஆழ்வாருடைய ஸ்தலமானது, அத்திரி முதலான ரிஷிகள் பயமில்லாமல் பார்த்திருக்க, (விசுவகருமனால்) வலிய பருதியையுடைய துலையில் நிறுத்து மதிக்கப்பட்டதும், அந்த ரிஷிகளும் நெஞ்சினால் நினைக்க அரிதான தன்மையையுடையதும், மேகங்கள்சேரும் சோலையையுடையதுமான திருமழிசையாம்.

* திருமழிசையில் அவதரித்த ஸ்வாமி! தேவரீரது தாமரை மலர்போன்ற திருவடிகளை அடியேனுடையமனசில் நிலை நிறுத்தினீர். இப்படி ரக்ஷிப்பதை ஒன்றும் மாறாமல் செய்தருள்வீராக. (அப்படி செய்வீராயின்) பழமையான அடியேன் ஊர், நிலம் முதலிய பொருள்களை என்னுடையது என்று சொல்லமாட்டேன். (அதாவது, மமகாரம்

பண்ணிசைத் தமிழும் பழமறை யினமும்
புண்ணிய ராப்பிர பன்னாதங் குலமும்
அகலகி லாதே மலர்மக ளுறைதரு
நிகரில் பார்ப்பொருட் சமயநன் னெறியும்
பொய்ந்நூ லிதுவெனப் புரைதப வுணர்ந்து
மெய்ந்நூல் போற்றி விழுப்பொரு ளறியப்
பொற்புறு புலனிலாப் புலலறி வாளன்
என்னனை யவருட் நணனர் வாழிய
மெய்ப்பொருள் கூறி விளங்கு றிவுறுத்திய
மைப்புயற் கொடையினெம்பழிசைப்பெருமான்!
துஞ்சா விழுப்புகழ்ச் செஞ்சொற் புலவர்க
கெஞ்சா நின்புகழ் யான்சொலற் காமே?
என்னினும், நின்பால் முன்னிய காதலின்
முன்னம எழுபநாண் தன்னையும் தாழ்த்திப்
பன்னுதற் கெழுமென் னுள்ளம்: குதலைப்
புன்மொழி யனை புகழ்ந்துகேட் டுவந்தா
குன்திருச் செவிசாய்த் தூவத்தியால் நீயே
பிறந்தனை—அத்திரி புலத்தியன் அங்கிரசுவெனும்
மெய்த்தவ முனிவரின் விழுத்தவ மியற்றிய
பார்க்கவ முனிவற்கு நோககருங் கவினியல்
பாடல்சால் சிறப்பிற் பண்ணிசை நல்லியாழ்க்
கனகாங்கி யென்னும் அணங்கி னுள்பால்
இளமயில் களிதூஙக
முகிலாடு குளிர்பொழிலின்

---

கொள்ளேன் என்றபடி.) தாமரைமலரிலிருக்கும் பிரம தேவனும் இனிமேல் என்னைப் பெரிய பாழான குடவில் தங்கச்செய்து தாய்மார்களுக்குச் சுமையைக்கொடுக்கமாட்டான். (அதாவது, இனிமேல் எனக்குப் பிறப்பில்லை என்றபடி.) பதியைச்சொன்னது, மற்ற பொருள்களுக்கு உபலக்ஷணம்.

படாந்தியோ டடைகடுலவன்
இளந்தாழையின் வளர்ந்தோங்கிய
செவ்விளநீர் யறித்துதவி
ஊடல் நீக்கிய ஆடல்சால் சிறப்பின்
தண்காஞ்சித் தாதாடிப்
பைப்புறம் திகழ்சேவற்
பெடைகண்டு 1சுக மென்னை
அயனீங்கிய விடந்தலைப்பட்
டின்குரற் டலகூவி
நீண்டாதுக அஞ்சிறகுளரித்
தலைதாழும் குயிற்குலமும்
மடபஞ்ஞையு மாறுகெளத்
தண்பெயற புயல்படிதரு
செழுர்வள னிறைவுறு திருமழி சைக்கே:
வளாந்தனை—தலஞ்சொலும் நெடும்புகழ்ச் சகந்
[நா தன்றன்
உளம்பொழி கருணையிற் பிரம்பறப்பாளன
திருவாள னெனபான் மனைவி பாலமு
துண்ணு தழாது முண்ணுஞ் சோறு
கண்ண னெம் மாடனென் றுள்ளுறத் துய்த்தே:
அருளினை—உள்ளுறக்காதல் வெள்ளங்கோப்பக்
கரைபுரண் டெழுதரு முவகை யுந்தத்
தன்பால் நண்ணிய வேளாண் முதியன்
அன்பா லுதவிய ஆன்பா லுண்டுந்
திளமையுற் றெழுதரு முழுதழ கொழுகிய
மகப்பே றெய்தியுன் னடிக்கீழ்த் தினமும்
பழுதறு தொண்டுசெய் திழிவின் றுயற்கே:
ஆய்ந்தனை—மறைப்பொருள் கொள்ளா முதற்
[பொருள் வேண்டாச்

1. சுகம் = கிளி.

சாக்கிய ஆர்கதச் சாங்கியம் முதலாப்
போக்கறு பனுவலைப் புன்னெறித் தாக்கி
ஒன்றே யாவும் இன்றே யென்னும்
மாயா வாதம், மறைக்கயல் நூலே
யுரித்தெனக் கொண்ட நிறத்திழி யக்கும்
சுடுவெண் ணீறு மிடுசீ ராளர்
பற்றிய நெறியும் பலப்பல யாண்டே:
ஒக்கந்தனை — தீதுதீர்ந் துய்யச் சிவவாக் கியரெனும்
பேரும் புனைந்து பெருங்கவி பாடி
யேகுற் றிருந்த வொருநாள்,
திருக்கோவலில் தனித்தனியந்
தொருங்கு கூடிநின் றெழுந்திருப்ப
நெருக்குண் ணிய இடைப்பு கூடப
திருக்கிளர் திரு மார்பினன் றனை
முதலவரிடு சுட ரொளியின்
இனிதுநோக்கிய உயர் பெருமகன்
பேயாழ் வாரெனும் 1மூவரு ளொருவன்
தின்னையற் சிறுசெடிசட்
டலைமாறிச் சிலகட்டுப்
பெரும்பொள்வாற் கலந்தாங்கி
அறுதாப்பு கரங்கொண்டு
புனல்வார்க்கச் செயுமிழிதொழில்
கண்டனை யண்டினை கைகளைக் கொட்டினை
விண்டனை பலவுரை வெதுப்பிடப் பலநாள்
வாது தொடுத்தனை
சூது படுத்தனை
நீறு விடுத்தனை
பாத மடுத்தனை

---

1. மூவர் — முதலாழ்வார்கள்: (1) பொய்கையாழ்வார்; (2) பூதத்தாழ்வார்; (3) பேயாழ்வார்.

80 எவனால களித்தவன்
எவனால கொடுக்கினன்
எவனால குண்டவன்
எவனால குமிழ்ந்தவன்
எவன் பிறப்பிலி
85. எவன் இறப்பிலி
எவன் முதலிலன்
எவன் இடையிலன்
எவன் முடிவிலன்
எவன் ஒப்பிலன்
90 எவன் மவிலன்
எவன் உயர்கலன்
எவன் விட்டுணு
எவன் நாரணன்
எவன் அச்சுதன்
95 எவன் கேசவன்
எவன் பகவன்
எவன் விசுவன்
எவன் சவிதா.
எவன் புருடன்
100 எவன் வாசுதேவன்
எவனிவ்வுல குடையவன்
எவனைச் சாரும் யார்க்கும் இடுவன்
எவன் அழைத்தனன் இவர் இவரை
எவன் வருகுவன் இவர் இவராய்
101 எவன் தருமம் நிலைநிறுத்துவன்
எவன் அறவினர்ப் புரந்தருள்வன்
எவன் கொடியவர்க் கிடர்தருவன்
எவன் தக்குழி யவதரிப்பன்
எவன் எளியன்

எவன் அரியன்
எவன் உருவினன்
எவன் அருவினன்
எவனோ ரியல்பினன்
எவனோ ரியல்பிலன்
எவன் பெயருளன்
எவன் பெயரிலன்
எவன் உள்ளுளன்
எவன் வெளியுளன்
அவனே யுலகுக் காதிகா ரணமென
இதவுரை கூறியப் பெருமகன் நினக்கம் (னே:
முதுமறை முடிவினை மொழிந்த செம்பொருளி
எதிர்ந்தனை — மீனமர் பொய்கையின் வெண்கரை
[யொருநாள்
துன்னற் றொழிலினின் மன்னினை யிருப்ப,
வெம்பணி சூடித் தண்பிறை தாங்கி
வால்வெள் ளேற்றின் வானிடை வருவோன்
மாதினின் னண்பி "வரம்பல தருகுவன்
கேண்மதி நீ"யென வாய்வா ளாமைகொள்
நின்னுயர் பெருமையைத் தன்னமு மெண்ணான்
கேட்டி யென்று மீட்டு முரைப்ப,
"வல்லே யுயர்வான் வழங்குதி; மாட்டா
தொழியின், அழியா துடனிலை தருகுதி;
அதுவினை வழிதுதே யாயின், நீஇத்
துன்னூசி செல்வதன் பின்ன ரிவ்விழை
செல்லுமா றருள்தியோ வல்லஎம் தேவே!"
என்னலும், உள்ளத் தெழுந்த கதழ்வினின்
நுதல்விழி திறந்தாங் கொழுங்கனல் துரந்த
திரிபுர மெரியெழ நகைகொளு முரவினன்
மதனுரு வொழிவுறக் கனல்விடு விழியினன்

நளிர்புனற் சடிலமார் பெரும்பெயர்க் கடவுளோ
அஞ்சிலை அயர்ந்திலை அசைந்திலை யாயே: [டும்
உணர்த்தினை—கடும்புலி வானிடை விடுந்திற லொ
[ருவற்கு
நினைவினின் விழுமணிக் கலசப்பிர மித்தும்,
வனமணித் தாரும் வனசவொண் டாரும்
இனமணி மாலையி னெழில்பெறக் காட்டியும்,
கொங்கணா னென்னும் பொங்கண லவற்குப்
*பூழியி னுண்டைகற் பொன்செய வருளியும்
எண்ணரும் யோகத் தியைந்தநின் னருந்திறல்
வண்ணவங் கரதலா மலகமாத் தெரித்தே:
மாற்றினை—கணிகண னெனும்நின தடியனொ ட
[ர்வுறீஇ
யோகுநீ செய்த காலம்நின் சார்பிடப்
பொலிவுறக் கோலம் புனைதரு முதியள்நின்
திருவருட் கிலக்காய்ச் சரணம் புக்கு
நல்லெழில் வேண்டிய ஞான்று நரைதிரை
முதுக்கூ றொழிந்து முகமதி விளங்கி
மரம்பயில் வாவலின் வற்றி வீழ்முலை
படர்ந்து திரண்டு பணைத்து மதர்த்துப்
பொற்சுணங் கவிர்ந்து பொருப்பென மருப்பென
†வீழ்முலை யாகியும் மின்னிடை சிறுத்தும்
கவரியிற் கூந்தல் கரும்புய லாயும்
கண்டோர் காமுறீஇக் கவினலத் திலக்கியத்
தெழிலுறு வனமயங் கிளமபரு வத்தே:
பணித்தனை—நல்லுருக் கொ[illegible]டவந் நங்[illegible]
[illegible]ன் பினை

---

* பூழி=புழுதி.
† வீழ்தல்=விரும்பப்படு[illegible]

ஒக்கவுண் டுறநாள் மெய்க்கவின் அவளிற்
கெடாதுற விழைந்த இறைமகன் விளைவறிந்
[1]திரவினிற் பகல்வருங் கணிகணனைச் சாரந்
திருவும் இளமையும் நலனுறத் தன்னைப்
பாடுமா பணிப்பப் பார்த்திப! யானே
நாக்கொண்டு மானிடம் பாடுவே னலலென்' எனக்
கார்க்கொண்டல் வண்ணனைக் கவிசொலக் கறுத்து
'என்னாட் டிறையும் நில்லா தேகெ'ன.
அன்னான் நின்பால் அண்பினன் அறைதலும்,
அஃகாப் பெரும்புகழ் அத்தி கிரிமிசை
†வெஃகா வேந்தனை விளித்து விளங்கும்
மணிவண் ணா! இக் கணிகண னோடு
செந்நாப் புலவனும் செல்வேன்; நீயுமுன்
பைந்நாகப்பாய் சுருட்டிப் [2]படர்' என,
அவ்வழித் தாக, அகநகர் முழுவதும்
செவ்விகெட் டொழிதலும் தெரிந்தனன் வேந்தன்
கணிகணன் கழலிணை பணிதர விரங்கிப் (துப்
பெயர்ததும் நகர்ப்புகுந் திடக்கைகீழ்க் கொடுத்
பைந்நாகப் பாய்மிசைப் பள்ளிகொண் டிடவே:
தெரித்தனை—இடந்திகழ் சோலைக் குடந்தையில்
மாமறை யோதுநர் நீயயல் நிற்ப [மறையோர்
நின்றிற னறியார் நிறுத்த, நீயகன் றபின்
இன்னதென் றறியார் வெள்கி, நின்கழல்
தாழ்தலும் கருநெலிற் றணி*மறைப் பொருளே:

---

1. இரவு = யாசகம்: பிக்ஷையின் பொருட்டு.

† வெஃகாவேந்தன் = திருவெஃகாவில் எழுந்தருளியிருக் கிற பெருமான்.

2. படர் = நட. என்னும் ஏவல்.

* 'க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்நம்' எனும் வே த வாக்யம்.

காட்டினை—நீயெழுந் தருள்வழி நேமியோன் முக
[ங்கொள,
ஆ! இதென் றறிந்தோர் அதிசயித் தடைந்து
பெரும்புலி யூரற் குரைப்ப அப் பெரியோன்
இறும்பூ தெய்தினின் இணையடி யிறைஞ்சிச்
சொற்படு நால்வகைச் சுருதியின் வேள்வியில்
முற்படு பூசனை நிற்குவந் தாற்ற
அறியாப் பனவர் அழுக்கா றற்றுச்
செறிதலும் 1பெரியோன் சிந்தையு ளுவப்ப
உள்ளுநறை மாயனை யுள்ளி யவன்றன
தொளளுந ரு வாகநின் எள்ளலி லுருவே:
கேட்டனை—ஆரா வமுதனைப் பாரா 'என்னே!
நடந்தகால் நொந்தகொல்? ஏனமாய் ஞாலம்
இடந்தமெய் தளர்ந்தகொல்? ஏனோ நீதான்
கிடந்தனை? எழுந்தனை யுளங்கொளக்கிளக்கென:
பாடினை—நான்மறை நுதலியமெய்ம்பொருளதனைப்
பான்முறை தெரித்து நான்முறை தொகுத்து
நறைச்சந்த மாதர் மயற்சிந்தச் சந்தத்
திருச்சந்த விருத்த வளச்சந்த நூலும்,
'நான்முகன் தன்னையெம் நாரணன் தர, அவன்
தான்முக மாகச் சங்கரற் றந்தனன்
நூன்முறை தெரித்த வான்பொரு ளிதுவென
நான்பயின் றறிந்தேன் காண்புவி யீர்!' என
மெய்ப்பொரு ணிறுவிய வெண்பாவந் தாதியும்
முற்பொரு ளறிவான் †செப்பநூ லிரண்டே:
அளித்தனை—நீதரு நல்லுரை நூலறி வின்றிப்
பாழ்படப் பல்பகல் கழித்த
ஏழை யேற்கும் இரங்கியுன் னருளே. (4)

---

1. பெரியோன்—பெரும்புலியூரடிகள்.
† செப்பம் நூல்=செவ்விதான பிரபந்தங்கள்.

உன்னத் துயர்தீர்த் துறையப் பதமீந்து
மன்னும் புகழ்சேர் மழிசையே—முன்னாகி
நாவலவற் றூங்கு நயந்தார்க் கிடாதழைத்த
நாவலவற் றூங்கு நகர். (5)†

நகரம் பலப்பல தவ்வயி னுக்கிய நாரியர
நகரம் பலப்பல மந்தே னருணல் குளமிழிவாது
நகரம் பலப்பல மீகிலெ டன்னைச்செய் நண்ணிவந்
நகரம்பலப்பலவானை வென்றோய்க்குநனியரிதே (6

அரிதுணர் மறைப்பொருள் எளிதுணர் வகைத்
[தாட்ச்
செந்தமிழ் மொழியிற் றெரித்த பெருப்!

---

†5 உலகத்தை விரும்பியுண்ட பெருமானுக்கு முன் சென்று, தாம் நாவற்பழத்தையாவது, அவலையாவது கொடுக்காமலேயே அவனைத் தப்பின் வரவழைத்த நாவலவரைத் தன்பாற்கொண்ட நகரம், நினைத்தமாத்திரத்தில் துன்பத்தைத்தீர்த்து, வசித்தால் மோக்ஷத்தையுங் கொடுத்து நிலைபெற்ற புகழையுடைய திருமழிசையாம். (நாவல்—பழத்துக்கு ஆகுபெயர்.)

6 பலபலநகரங்களிலும் வசிக்கிற செல்வர்களைத் தம் வசமாக்கியவிலைமாதர்களாகிய தூயோருடைய (இழிந்தோருடைய) கண்களாகிய அம்புகள் துன்பப்படுத்துதலினால் துயருழந்தவனாகிய அடியேனுக்குக்கிருபைசெய்து, அடியேன் மனமானது இழிவானபாழ்நிலமன்று; விளைநிலம் (ஞானமுண்டாகுமிடம்) என்னும்படி செய்தருளவேண்டும் நெருங்கிவந்து (ஒன்றும் செய்யமுடியாமற்) பெயர்ந்துபோன சிற்றம்பலத்தையுடைய வலியோனை வென்றவராகிய தேவரீருக்கு இது மிகவும் அரிதானகாரியமோ? (மிகவும்சுலபமானகாரியம் என்றபடி ) நகரம்—அதில் வசிப்போருக்கு ஆகுபெயர்.

ஒற்றையூர்த் தானுட னறிவி லெதிர்ந்த
வலியை பெரியை அறிவனை யகலின
சொல்லரும் வேதச் சுடரொளி விளக்கினை
உன்னரும் யோகத் துணர்வி னுணர்ந்து
"நிலனுட் டோன்றிய 1ஐந்தும் நீயே
புனலிற் புலனும் நான்கும் நீயே
கனலிற் காணும் மூன்றும் நீயே
அனிலத் தமைந்த விரண்டும் நீயே
ககனங் காணு மொன்றும் நீயே
*ஆறா றுறுமாய் ஐந்தைந் தைந்தாய்
ஐந்துமூன் றொன்றாய் ஐந்தி னொர் பலவாய்
மூன்று மூன்று மூன்று மூன்றுமாய்
மூர்த்தி ஒன்றாய் மூர்த்தி மூன்றாய்
மூர்த்தி நான்காய் மூர்த்தி பலவாய்
எட்டெட் டெட்டாய் ஏழே ழேழாய்
எட்டுமூன் றொன்றாய் எண்ணில பலவாய்
பத்தொடு பத்தாய்ப் பத்தினுந் தோற்றமாய்
எவரும் எவையுமா யிருப்பவன் நீயே.
ஊனில் உயிர்நீ உறக்கத் துணர்ச்சிநீ
ஆனில் ஐந்துநீ அவற்றுட் டேய்மைநீ
நானும் நீயெம்பிரானும் நீயே
நானன் றில்லை நீயும் நீயன்
றியானும் இல்லை யாரும் எம்பெருமான்!
ஆணொடு பெண்ணாய் அல்லன நல்லவாய்

---

1. ஐந்து—சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம்என்பன: மேற்பூதங்களுக்கு இவற்றினீறறிலிருந்து முறையே ஒவ்வொன்றைக் கழிக்க.

* இது முதல் 19-வது அடி முடிய வருமவற்றின் பொருளைத் திருச்சந்தவிருத்தம். 2, 3, 4, 17, 77, 79-ம் பாசுரங்களின் வ்யாக்யானத்திற் பரக்கக் காணலாம்.

ஊனொடு றோசையாய் உண்மையும்பொய்யுமாய்
விண்ணிறந் தோனாய் விளங்கு ஞானமாய்
எரியிரு சுடராய் இலங்குமால் வரையாய்
நிற்பன திரிவன நீயாய் நின்றனை:
தன்னுட் டிரைத்தெழும் தரங்கவெண் டடங்க
தன்னுட் டிரைத்தெழுந் தடங்குதல்போல [டல்
நின்னுட் பிறந்த நிற்பவும் திரிவவும்
நின்னுள் ளடங்கும் நீர்மைநின்கண்ணே:
நீயே நான்முகற் றந்தனை; அவனே
சேயாத் தந்தனன் சிவனைச் செவ்விய
போதின் மங்கை பூதலக் கிழத்திநின்
தேவியர்; நின்மகன் திசைமுகன்; அவன்சேய்
ஏறார் சடையன்: இன்னமும் கூறின்,
நீநின் தன்மை நெகிழ நிற்பின்,
எத்தேவர் வாலாட் டெவ்விதச் செய்கையும்
அப்போ தொழியும் அழைப்பும்" என் றருளி,
"என்னுடை யிறைவனில் அன்னியர் பிறர்கள்
காணிற் பொல்லார் காதுக் கின்னார்
பேணின் வரம்தரு மிடுக்கும் பெற்றிலர்
மண்டுவா ளமரில் வாணனைக் காப்பத்
தண்டுவாள் சூலம் தனுவேல் தோமரம்
குந்தம் பலவும கொண்டன ரெதிர்ந்தார்
மோடி யோட முருக னோட
வாடிக் கடமால் மாமுக னோடத்
தேடி யவர்பின் சிவனுமோ டினனே!
சக்கரக் கையன் தடஞ்சிலை தொடுநாட்
பக்கம் எதிர்ந்தவர் படுசெயல் பார்த்தனம்:
தாதுலாங் கொன்றையம் சடையன் விண்ணவர்
நாதன் போதில் நான்முகக் கடவுள்
யாவரும் அடிதொழும் எங்கள் வேங்கடக்

காவலனே எங்கடவுள் காணுதிர்!
புன்புல வழியடைத் தரக்கிலச் சினையின்
நன்புல வழியான் ஞானநற் சுடர் கொளீஇ
என்பினிலெள்கிநெஞ் சுருகியுள் ளெழுந்ததோர்
அன்பினன் றவனை யாரே காணுநர்?
முப்பரம் பொருளினை மூலப் பொருள்தனை
அப்பிலோர் பொருளை யானுற வறிந்தாங்கு
ஒன்றிரு கண்ணு னுள்ளிட் டமரர்
யாவரும் காண வலரே? வைத்த
பண்டைத் தானப் பதியும் காணார்;
முத்திற வாணியத் திரண்டினி லொன்றும்
மத்தர் சிறுச மயப்பந் தனையர்
அறியார் சமணர் அயர்த்தனர் பவுத்தர்
சிறியார் சிவப்பட் டாரே செப்பின் அப்
பிணச்சம யத்தர்தம் பேச்சைக் கேட்டு
மயக்கடைந் தாழ்வார் பலரே மண்மிசை
மெய்ப்பொருள் வேதமுதற்பொருள் விண்ணோர்
நற்பொரு ளான நாராயண னால்
வீடாம் பெற்றி யறியார்மெய் வருத்தித்
தேடா வுழல்வர் தெளியார் கொல்லோ?
நீர்க்கண்டன் கண்ட நிலையினை நினைவினின்
மார்க்கண்டன் கண்ட வகையே வருமென:
ஆல நிழற்கீ ழறநெறி தன்னை
யேலே யுகத்தில் நால்வர்க் கால்மேல்
வளர்ந்தான் றனைத்தான் வணங்குமா று
கிளந்தவா சகமும் கேட்டறி யார்கொல்?
வேறிசை செக்கர் பேனிச் செஞ்சடை
நீறணி நிமலன் சிரமிந் திடுமா
றயனிடு சாபம் யாரே துடைத்தனர்?
குலமறை நான்முகன் குண்டிகை நீரின்

அருமறை நாரண னடிமலர்க் கழுநீர்
தலைமேற் றருந்துயர் தவிர்ந்ததும இலையே?
ஈசனும் அயனும் ஏத்தரும் இறையவன்
மாயையா னுணர்ந்தபின்னன் வல்லேல மண்மிசை
யாரே யாவர் எனக்கு? என்மதிக்கு
விண்ணொலா முண்டுகொல் விலையே? நாக்கொடு
மாலிடம் பாடவு மாட்டேன் பாட்டே
வானவர் நோய்போ மருந்தமு தளித்தவன்
மானவற் றேறின் வலைவனி னளித்தவன்
யாரும் கூறும்எம் பிரான் திரு நாமம்
அல்லதை யுரையா தாகும்என் னாவே!
கேடில்சீர் வரங்கள் கிடைத்தய னரன் [1]அரி
நாடுநான் நண்ணினும் போகம்வீற் றிருப்பினும்
கூடுமே? என்மனம் கொள்ளுமே குறிப்பினே?
மற்றியான் தொழுவார் ஒருவரை யின்மை
கற்றைச் சடையனே கரியாம் காணுதிர்!
பிதிரும் மனமிலென் பிஞ்ஞக னேடும்
எதிரவன் நேரான் எனக்கவன் காண்மின்!
யாவும் எவருமாய் எத்தே வருமாய்
மூவராய் நிற்கும் முதல்வன் றனது
முற்படு முதுபுணர்ப் பறியார் நாளும்
கற்பதெல்லாம் கடையே; அவர்தாம்,
விலைக்காட் படுவர் விடமுண் பவரே:
மறந்தும் புறந்தொழா மாந்த ரவரைச்
சாத்தியிருப்பார் தவமே தவமது:
நாற்குலம் வந்திலன் மேற்செயல் தாங்கிலன்
முன்னம்யான் வாழ்ந்த பன்னெடு நாளும்
பிறந்திலென் பிறந்தபின் மறந்திலேனே!

1. அரி = இங்கு இந்திரன்.

8A
2-63

வையத் தீரே! வையத் தீரே!
உய்ந்நெறி கேண்மின் உள்ளம் போற்றுமின்
உடையி னரனுர் மறையி னுணர்த்திய
பெயரே சொல்வல் பிறிதில காணுமின்!
நானும் அறிந்தேன் நான்முகத் தவற்கும்
மான்மழு வினற்கும் மேன்முது பரம்பொருள்
அவனே என்இறை அவனே என்னுயிர்
சீலத் தீரே! செப்பக் கேண்மின்!
தேவரல் லாரைத் தேறுதல் செயன்மின்!
வாயி னுளும் வாழ்த்துதல் செயன்மின்!
கண்ணினின் விருப்பிற் காணுதல் செயன்மின்!
முடியுறத் தாழ்த்தி அடியிறைஞ் சன்மின்!
முதுமறைப் பொருளெனும் முதல்வன் றன்னை
வாழ்த்துக காண்க வாயின் விழியின்
தாழ்த்துக கேட்க தலையிற் செவியின்
போற்றுக வுளத்திற் *புறநசை யொழிமின்!
இதுவே மெய்ந்நெறி இதுவே முன்னெறி
இதுவே செந்நெறி இதுவே சென்னெறி
ஐயம் இன்றின்று அவனியீரே!" யென
இன்ன பரிசின் இயம்பினை இன்னம்
நின்னி னறிகுநர் யாரே? நினைப்பின்
இத்திறம் மறைப்பொருள் மெய்த்திறந் தேர்ந்
சித்தம் தெளிந்தருள் வைத்துரை செய்த [துன
[1]தத்துவம் பலவி னுட்டிறப் பொருளும்
சித்தசித் தீசுர முத்திறப் பகுதியும்,

(1) இப்பொருள் காணப்படும் பாசுரங்கள்:—திருச்சந்த விருத்தம் 1, 2, 3, 4, 7, 17, 77, 79, 94: நான்முகன் திருவந்தாதி 7.

* புறநசை = புறச் சமயங்களில் வைத்த பற்று.

[2]எவ்வகைப் பொருளுஞ் செவ்விதி னளித்தும்
[3]அவ்வகைப் பொருளா யமைந்திடு பலப்பல
[4]தெய்வங் களுந்தன் திருவருட் டிறத்தே
பெய்வரந் தர இறை விளங்குறு தன்மையும்,
[5]முக்குணத் திருமென வைத்த வவ்வருள்
நக்கபி ரானொடு நான்முகன் தகுதியும்,
[6]அவர்நம திறைவனை அடைந்தடி தொழுதலும்,
[7]இவர்களுக் கரியனு யிலக்குறு மியல்பும்,
[8]புன்னெறி புகுவோர் புந்தியின் தகவும்;
[9]உன்னருங் கதிதரற் குரியவன் பெருமையும்,
[10]பிறர். தலைமையடைந்தவர்க் கருளிய பெற்றியும்
[11]நறைசெறி மலரயன் கரகநீர் வரவும்,
[12]அயனிடு சாபத் தலையரற் களித்ததும்
பலவுங் கூறி [13]நின் மணனுனர் வியல்பைச்
சிலபிர மாணம் காட்டித் தெரித்துச்,
[14]சிறந்தநூல் கல்லார்திறனும், [15]செயலில்
மறந்தும் புறந்தொழா மாந்தர்தம் மேன்மையும்,

---

(2) திருச்—10, 72: நான்முக—1.
(3) திருச்—26; நான்முக—20,
(4) நான்மு—38.
(5) நான்மு—56: திவுச்-53, 69, 70, 71.
(6) நான்—43, 75: திருச்-9, 87.
(7) நான்—3, 10, 73: திருச்-7, 76.
(8) நா—5, 14, 88: திருச்-68.
(9) நா—13, 15.
(10) நா—17.
(11) நா—9
(12) நா—31: திருச்-42.
(13) நா—26, 51, 74, 75, 84, 96: திருச்-88, 89, 108.
(14) நா—52, 54.
(15) நா—18, 68.

[16]சென்னாள் கழிந்த திறமும், சிறந்த
பின்னாள் நலனும் பேசி எம்பால்
திருவுள மிரங்கிநீ [17]யருளிய திப்பிய
இருவகை நூலையும் அறியார் வாளா
வசழவும் அறியார் ஊழ்வலி யென்னே!
ஆழ்பொரு ளறிந்துநிற் பேணினர்புகழ்பொருட்
பழித்தலும் செய்தனர் அன்னோ! அவர்தாம்
முழுத்தனி முதல்வனல் அடித்தலம் வேண்டிய
நிற்பழி தூற்றிய சொற்படு பவத்தால்
நீயுளங் கொள்கிலை யேனும், அந்தோ!
வாயுரை வழங்காத் தீயவெந் நரக
வெம்பாழ்ங் குழியிடை வீழ்ந்து பலவகைத்
துன்பத் தாழ்ந்து தொலைகுவ ரேயென
உன்னுந்தோ றுன்னுந்தோ றெல்லாம்
பன்னரும் துயரினிற் பதைக்குமென் னுளமே.

உள்ளுவா ருள்ளத் துயர்புகழி னோங்குறயெம்
வள்ளலார் வந்த பழிசையே—எள்ளலிலார்
தாழ்ந்தொருசீ ரேற்றத் தனித்தட்டின் முற்றுலகில்
தாழ்ந்தொருசீ ரேற்ற தலம் (8)

---

(16) திருச்—64.
(17) உபதேசம் செய்தது: நா-11, 15, 53, 78.
(இவற்றை யெல்லாம் வேறுபல பாக்களிலும்காணலாம்:)
(பிறவும் ஆங்காங்குக் காணலாம்)
8. நிந்தித்தலில்லாத மஹரிஷிகள் தங்கியிருந்து ஒரு துலையின் ஒருதட்டில் வைக்க, (அப்பொழுது) உலகம முழுவதையும வைத்த தட்டைக் காட்டிலும் தாழ்ந்து, ஒப்பற்ற பெருமைபெற்ற ஸ்தலமானது, நினைக்கும் அடியவர் மனத்தில் மிகுந்த புகழோடும் சேர்ந்து விளங்குகின்ற வள்ளற்றன்மையுடைய எங்கள் ஆழ்வார் திருஅவதரித்த திருமழிசையாம்.

தலத்தலை யிற்பல் பவத்துழன் றேற்கருள் தந்தனைகாத்
தலத்தலை யிற்புயல் தாழும் மழிசைத் தலைவ! காத்
தலத்தலை யிற்றிரிந் தான்புகழ்ந் தோய்! நினைத்தாழ்த்தினர்பா
தலத்தலை விற்கொடுந் தீயகம் சார்தல் சரதமதே. (9)

அதுவென இதுவென வுதுவென எதுவென
அவரென இவரென வுவரென எவரென
யாவுமாய் நின்ற தேவபிரான் றனைக்
கையக நெல்லியங் கனியிற் காட்டி
உய்வித் தனையெமை உய்வித் தனையே
நின்புகழ்ப் பாடுதும் நின்றாட் போற்றுதும்
நின்கவி கூறுதும் நின்வழி நிற்குதும்
அன்றியா மாற்றுவ யாவே? முகிற்றுப்
பைங்கூ ழாற்றுவ துண்டே? மழிசை
வளம்பதி வந்த கொழுந்தே! வாழி!
உளங்கனிந் தடியனேற் கருண்மதி[1] நல்கும்
மறந்தும் புறந்தொழா மாந்தரில்
திறம்பா துன்வழிச் செல்வதைத் திறனென (10

திருமழிசை யாழ்வார் மும்மணிக்கோவை
முற்றிற்று

---

9. கடலினின்று எழும் மேகங்கள் சோலையினிடத்துப் படிகின்றதான திருமழிசையில் அவதரித்த ஸ்வாமீ! கையினிடமாக இருந்த பிரமனது தலையினால் பல இடங்களிலும் திரிந்த சிவபெருமானால் புகழப்பெற்றவரே! தேவரீர், உலகத்தில் பலபிறவிகளிலுழன்ற அடியேனையும ரக்ஷித்தருளினீர். (இப்படிப்பட்ட பரம காருணிகரான) தேவரீரைக் குறை சொல்லுபவர்கள் பாதாளத்தில் மீட்சியில்லாத கொடிய நரகத்தில் வீழ்வது உண்மையே யாகும்.

1. மதி — இங்கு முன்னிலையசை.